பக்கங்கள் 18+4

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 16 வெள்ளிக்கிழமை 30.05.2025 | அதிர்வு 300

## தாயகம் திரும்பிய 75 வயது முதியவர் சிறையில் அடைப்பு

(ந.லோகதயாளன்)

போர்க் காலத்தில் உயிரைக் காக்க இலங்கையில் இருந்து தமிழகத்துக்குத் தப்பிச் சென்ற முதியவர், 03▸

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தமிழ் அகதிகள் விடயத்தில் அநுர அரசு இரட்டை வேடம்

### யு.என்.எச்.சி.ஆர்., இந்தியா மௌனம் காக்கக் கூடாது என்று சுமந்திரன் வலியுறுத்து

(ந.லோகதயாளன்)

“தமிழ்நாட்டில் இருந்து முறைப்படி தாயகம் திரும்புபவர்களையும் சிறையில் தள்ளுவதன் மூலம் தமிழர்கள் நாட்டுக்குள் வரக்கூடாது என அநுர அரசு விரும்புகின்றதா.?”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார். 03▸

# உங்களை நம்பி நாட்டுக்கு வந்தால் கைதா?

## அநுரவிடம் மனோ கேள்வி

“வெளிநாடு சென்ற தமிழர்களை நீங்கள்தானே திரும்பி வரச் சொல்கிறீர்கள்? உங்களை நம்பி நாட்டுக்கு வந்தால் கைதா?”

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசை நோக்கிக் கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

இது தொடர்பில் மனோ எம்.பி. தனது எக்ஸ் தளத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

“ஊழல் பேர்வழிகளைக் கைது செய்து சிறையில் அடையுங்கள். அதைச் செய்யத்தான் வேண்டும். இன்னமும் நானூற்றுக்கணக்கான ஊழல் கோப்புகள் இருப்பதாகச் சொன்னீர்கள். அனைவரையும் 03▸






# யாழ். மாவட்ட அபிவிருத்திக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

கடற்றொழில் அமைச்சரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் இணைத் தலைவரான வடக்கின் மகானா ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோரது இணைத் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதில் மாவட்ட செயலாளர் ம.பிரதீபன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களானசி.சிறீதரன்,கே.இளங்குமரன், ஸ்ரீ பவானந்தராஜா, ஜெ.றஜீவன், இ.அர்ச்சுனா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், பிரதேச செயலக மற்றும் பிரதேச சபைகளின் செயலாளர்கள், பொலிஸ் உயரதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள், கிராம சேவகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நடப்பு ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக மாவட்டத்துக்கு ஒதுக்கப்படும் நிதி, அதனூடாக செயற்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

மேலும், துறை ரீதியான முன்னேற்றம் குறித்த மீளாய்வில் சேவைத் துறைகள் சார்ந்த முன்னேற்றங்கள், அவற்றில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்தும் பேசப்பட்டன.

அத்துடன் விவசாயம், மருத்துவம், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைசார் விடயங்கள் விவாதிக்கப்பட்டன. குறிப்பாக, அம்புலன்ஸ் சாரதிகள் பற்றாக்குறை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டன.













# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தாயகம் திரும்பிய...

சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறியமைக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

1987ஆம் ஆண்டு தாயகத்தில் இருந்து உயிர் தப்பி தமிழகத்துக்கு அகதியாகச் சென்றவர் முதுமையில் நாடு திரும்பியபோது சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறிய குற்றச் சாட்டின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

சின்னையா சிறிலோகநாதன் என்னும் ஏழாலையைச் சேர்ந்த 75 வயது முதியவரே இவ்வாறு யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் இன்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

குற்றப் புலனாய்வு அதிகாரிகளால் முற்படுத்தப்பட்ட சந்தேகநபர் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் 5 சட்டத்தரணிகள் ஆஜராகினர்.

இதன்போது 1997 ஆம் ஆண்டு ஏழாலையில் இருந்து மன்னார் சென்று அங்கிருந்து 12 ஆயிரம் ரூபா படகுக்குச் செலுத்தி சட்டவிரோதமாக கடல் வழியாகவே சந்தேகநபர் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றிருந்தார்.

இருந்தபோதும் இந்தக் காலத்தில் சட்டபூர்வமாகப் பயணிக்கும் வாய்ப்பும் இருந்தமையால் இவர் எதற்காகச் சட்டவிரோதமாக பயணித்தார் என்பது தொடர்பில் தொடர்ந்தும் விசாரணை மேற்கொள்ள வேண்டிய தேவை இருப்பதனால் சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்காது விளக்கமறியலில் வைக்க வேண்டும் எனக் கேட்டு குடிவரவு – குடியகல்வுத் திணைக்களத்தின் 45/01 கீழ் குற்றம் சாட்டப்படுவதாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது சந்தேகநபர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்,

“இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் காரணமாக உயிரைக் காக்கும் நோக்கில் இலட்சக்கணக்கானோர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றபோது இந்த நபர் 1987 ஆம் ஆண்டு தமிழகத்துக்குச் தப்பிச் சென்றார்.

இவர் தமிழகத்தின் திருவண்ணாமலைப்பகுதியில் கண்ணகிபுரம் இலங்கை அகதிகள் முகாமில் தங்கி வாழ்ந்து தற்போது ஏழாலையில் வசிக்கும் தனது மகனுடன் முதுமைக் காலத்தில் வாழ்வதற்காக உரிய முறைகளின் கீழ் விண்ணப்பித்து சட்டபூர்வமாக நாடு திரும்பினார்.

முகாமில் அகதியாக வாழ்ந்தார் என ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகம் வழங்கிய (யு.என்.எச்.சி.ஆர்.) பதிவுச் சான்றிதழ், இலங்கை திரும்ப தமிழ்நாடு பொலிஸுக்குத் செய்த விண்ணப்பம், அதற்கு தமிழ்நாடு பொலிஸார் அவர் எந்த குற்றச் செயலிலும் ஈடுபடவில்லை என வழங்கிய சான்றிதழ்களுடன், சென்னையில் உள்ள இலங்கைத் தூதத்துக்கு விண்ணப்பித்து இலங்கை திரும்புவதற்காகப் பெற்றுக் கொண்ட பிரயாண அனுமதி ஆகிய வற்றைச் சரி பார்த்து ஐ.நா. அமைப்பே இலவச விமானச் சிட்டையையும் வழங்கியது. அவற்றின் பிரதிகள் மன்றுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன. எனவே, குற்றஞ்சாட்டப்படுவரை முழுமையாக விடுவிக்க வேண்டும்.

இலங்கை அகதிகள் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் தமிழகத்தில் இருப்பது உலகின் சகல நாடுகளுக்கும் தெரியும். ஆனால் இலங்கைப் பொலிஸாருக்குத் தெரியாமல் இருப்பது வேடிக்கையானது. அகதி என்றால் அவர் சொல்லாமல்தான் போவார். அவரை அகதியாக ஏற்றுக்கொண்டால் அவர் பயணித்தமை குற்றமாகாது. அது மட்டுமல்ல ஒரு குற்றவியல் நடவடிக்கையாக இருந்தால் குறைந்தபட்சம் 20 ஆண்டுகளுக்குள் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும். இங்கே 30 வருடங்கள் கடந்துவிட்டன.

இதேநேரம் இலங்கையில் இருந்து அகிகளாகச் சென்றவர்கள் நாடு திரும்ப வேண்டும் என அரசு உத்தியோகபூர்வமாக அழைக்கின்றது ஆனால், திரும்பியவர்கள் கைது செய்யப்படுகின்றனர். இதற்குக் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் பொறுப்புக்கூற வேண்டி வரும். தப்ப முடியாது.

இதேநேரம் குடிவரவு – குடியகள்வுத் திணைக்களத்தின் சட்டப் பிரிவு 45/01 இன் கீழ் வழக்குத் தாக்கல் செய்தால் நீதிவான் 47ஃஏ பிரிவின் கீழ் பிணை வழங்க முடியும். அதனால் முழுமையாக விடுவிக்க முடியாத பட்சத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பிணையில் விடுவிக்க வேண்டும்.” – என்றார்.

இவற்றை ஆராய்ந்த மல்லாகம் நீதிவான் ஜே.சுபராஜினி சந்தேகநபரை எதிர்வரும் ஜூன் மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

---

### தமிழ் அகதிகள்...

தமிழ்நாட்டில் இருந்து தாயகம் திரும்பிய 75 வயது முதியவர், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கையில் இடம்பெற்ற போரின் காரணமாக உயிரைக் காப்பதற்காகப் படகுகள் மூலம் ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ள ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தாயக உறவுகள் தொடர்ந்தும் பெரும் வேதனையின் மத்தியில் இரண்டாம் தரப் பிரஜைகள் போன்று தவிக்கின்றனர். இவர்களில் பல ஆயிரம் பேர் தாயகம் வரவும் தயாராகவுள்ளனர்.

இவ்வாறு காத்திருப்போரை நாடு திரும்புமாறும் சகல ஏற்பாடும் செய்து தரப்படும் எனவும் தெரிவிக்கும் அரசு, முறைப்படி சகல ஆவணங்களையும் பெற்று வருபவர்களையும் பொலிஸார் மூலம் வழக்குப் பதிவு செய்து சிறையில் தள்ளுவதன் மூலம் எஞ்சியோரை அச்சுறுத்துகின்றது.

ஏனெனில் 75 வயது முதியவரையே சிறையில் தள்ளும் இந்த அரசு இளையோரை என்ன பாடுபடுத்துமோ அல்லது பெண்களுக்கு என்ன நெருக்கடியோ என நியாயமான ஐயம் எழும். இதன் மூலம் வடக்கு, கிழக்கில் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்து விடக்கூடாது என்பதில் அரசு குறியாக உள்ளமை வெளிப்படையாகவே தெரிகின்றது.

எனவே, இலங்கை அகதிகள் விடயத்தில் யு.என்.எச்.சி.ஆர். மற்றும் இந்திய அரசு மௌனம் காக்கக் கூடாது. அநுர அரசின் இரட்டை வேடத்தைப் புரிந்துகொண்டு சகல விதமான அழுத்தங்களையும் பிரயோகித்து தாயகம் திரும்ப எண்ணும் அகதிகளுக்குத் தாய் நாட்டில் உள்ள நடமாடும் சுதந்திரத்தை உறுதி செய்ய வேண்டும்.” – என்றார்.

---

### உங்களை நம்பி...

கைது செய்து, விசாரித்து, ஆவன செய்யுங்கள். சட்டத்தில் இடமிருந்தால் ஊழல் பேர்வழிகளுக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்குங்கள். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆனால், எதற்காகத் தமிழக முகாமில் முப்பது வருடங்களுக்கு மேல் வாழ்ந்து, வயோதிபம் அடைந்து, உங்களை நம்பி, நாடு திரும்பிய, 75 வயதான சின்னையா சிவலோகநாதனை விமான நிலையத்தில் கைது செய்தீர்கள்? அவரை இன்று பிணையில் வெளியே விடாமல் எதற்காகச் சிறையில் அடைக்கிறீர்கள்?

வெளிநாடு சென்ற தமிழர்களைத் திரும்பி “வாங்கோ, வாங்கோ” என நீங்கள் தானே வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கிறீர்கள்? உங்களை நம்பி வந்தால், திரும்பி வந்தால் விமான நிலையத்தில் கைது செய்வதா?

சிவலோகநாதனுக்கு நாடு திரும்ப சென்னை இலங்கைத் துணைத் தூதரகம்தான் கடவுச்சீட்டு வழங்கி உள்ளது என்பது அரசுக்குத் தெரியாதா? வெளிநாட்டு அமைச்சுக்குத் தெரியாதா? தமிழக அரசின் பொலிஸ், பாரத மத்திய அரசின் குடிவரவு, குடியகல்வு வாரியம் என்பன ஒப்புதல் அளித்துள்ளன.

ஐ.நா. அகதிகள் ஆணைக்குழு, சிவலோகநாதனுக்குப் பயண சீட்டு வாங்கிக் கொடுத்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, விமானமேற்றி அனுப்பி வைத்துள்ளது. இவை உங்களுக்குத் தெரியாதா? வெளிநாடு சென்ற தமிழர்களை நீங்கள் தானே திரும்பி வரச் சொல்கிறீர்கள்? உங்களை நம்பி நாட்டுக்கு வந்தால் கைதா? “ – என்றுள்ளது.

# தமிழரசு – முன்னணி சந்திப்பு ஆரம்பம்



(ந.லோகதயாளன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு இன்று வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி சபைகளில் இணைந்து ஆட்சியமைப்பது குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும் பங்கேற்றுள்ளனர்.



# சம்பூரில் யானை தாக்கி வயோதிபர் உயிரிழப்பு!

திருகோணமலை மாவட்டம், சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள கணேசபுரம் பகுதியிலுள்ள கணேசபுரம் பிரதான வீதியில் காட்டு யானை தாக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மூதூர் – கட்டைபறிச்சான் பகுதியைச் சேர்ந்த 75 வயதுடைய வயோதிபர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த வயோதிபர், தனது வயலுக்குக் குருவிக் காவலுக்குச் சென்ற போது கணேசபுரம் வீதியில் வைத்து காட்டு யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சிறுப்பிட்டியில் தொடர் சொற்பொழிவு

சிறுப்பிட்டி மேற்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை (31) சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் (10) செவ்வாய்க் கிழமைவரை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தினமும் மாலை 6 மணிக்கு "சைவமும் வாழ்வியலும்" என்னும் விடயப்பொருளில் பண்டிதர் செஞ்சொல்வேந்தர் சைவப்புலவர் செ.த.குமரன் தொடர் சொற்பொழிவாற்றவுள்ளார்.

சொற்பொழிவில் இருந்து வினாக்கள் கேட்கப்பட்டு பராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

# மினிசூறாவளியால் வீடுகள் சேதம்!



(க.மகாதேவன்)

புத்தளம் – உடப்பு கிராமத்தில் உள்ள பகுதிகளில் நேற்று வியாழக்கிழமை இரவு வீசிய மினிசூறாவளி காரணமாக சில வீடுகளில் உள்ள கூரைகளின் ஓடுகள் வீதியில் வீசப்பட்டுள்ளன.

உடப்பு காளிகோவிலுக்கு அருகிலுள்ள சங்கக் கட்டடத்தின் கூரை சிறிதளவு சேதமடைந்துள்ளது. அத்துடன் கரையோரத்தில் அமைந்துள்ள சில வீடுகளின் கூரையின் சீட் சேதமடைந்துள்ளது. அத்துடன் மின்சாரக் கம்பிகள் சேதமடைந்துள்ளன.

மேலும் பலத்த மழை காரணமாக சின்னக்கொலனி பாதையில் நீர் நிரம்பியபடி காணப்பட்டதால் பாதசாரிகள் போக்குவரத்தில் பெரிதும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர்.



# “நீ கும்பிடுவது சிலையின் தலையையா? காலையா?” தோட்ட அதிகாரிகள் தமிழ் இளைஞர் மீது தாக்குதல்!

## நடவடிக்கை எடுக்குமாறு மனோ எம்.பி. வலியுறுத்து

“ஆலயச் சிலை பீடத்தில் பாதணியுடன் காலைத் தூக்கி வைக்க வேண்டாம் என்று சொன்ன, கமலநாதன் இமேஷ்நாதன் என்ற தமிழ் இளைஞரை, “நீ கும்பிடுவது, சிலையின் தலையா? காலையா? உங்கட சாமி தலையிலயாடா காலை வைத்தோம்” எனக் கொச்சைத் தமிழில் திட்டி, அனுர, சந்துன் என்ற இரண்டு, தோட்ட வெளிக்கள அலுவலர்கள் தாக்கியுள்ளனர்.” – என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

“இந்தத் தகவலை எமது அவிசாவளை புவக்பிட்டிய அமைப்பாளர் சசிகுமார் என் கவனத்துக்குக் கொண்டு வந்த நிலையில் இது பற்றி உறுதியான மேலதிக நடவடிக்கை எடுக்குமாறு அவிசா



வளை பொலிஸ/க்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரத்ன, நிலையப் பொறுப்பதிகாரி ஜெயலத், இளநிலை அதிகாரி ராஜரத்ன ஆகியோரிடம் வலியுறுத்தியுள்ளேன். அவர்களும் உறுதியான நடவடிக்கை எடுப்பதாக எனக்கு உறுதி அளித்துள்ளனர்.” – என்றும் மனோ குறிப்பிட்டுள்ளார்.

இது பற்றி மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது:–

“தற்சமயம் காயமடைந்த கமலநாதன் இமேஷ்நாதன் அவிசாவளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது உடலின் உயிர்நிலை பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

கமலநாதனைத் தாக்கிய, சந்தேக நபர்கள் இருவரும், மிகவும் சூட்சுமமான முறையில் தாமும் தாக்குதலுக்கு உள்ளானதாகக் கூறி, அதே அவிசாவளை மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதாகக் கூறி தங்கியுள்ளார்கள். இது பற்றியும் நான் பொலிஸ் அதிகாரிகளிடம் கூறியுள்ளேன்.” – என்றார்.

# கடும் காற்றால் புரண்டது ஓட்டோ

## காயங்கள் இன்றி தப்பினார் சாரதி

(எஸ்.கீதபொன்கலன்)

புல்மோட்டை – திருகோணமலை பிரதான வீதியின் கும்புறுப்பிட்டி பகுதியில் கடும் காற்று காரணமாக வீதியில் பயணித்திக் கொண்டிருந்த ஓட்டோ புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.



புல்மோட்டையில் இருந்து திருகோணமலை நோக்கி மீன் எடுத்துச் சென்ற ஓட்டோவே இவ்வாறு விபத்தில் சிக்கியது.

சாரதி எவ்வித காயங்களும் இன்றி தப்பியுள்ளார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இதுவா சமத்துவ சீத்துவம்?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது பேரினவாத மேலாதிக்கக் குரூர முகத்தை மூடி, மறைத்து நல்லிணக்கம் என்ற பெயரில் மகா நடிப்புக் காட்டுகின்றது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒரு தேசத்தில், நல்லிணக்கம் ஏற்படுத்தும் நடவடிக்கையின் முதலாவது - பிரதான - அம்சம் இடம்பெயர்ந்தவர்கள் தத்தமத் தாயகத்துக்கு மீளத் திரும்புவதறான உரித்தை மதித்து அங்கீகரிப்பதாகும் (Recognizing the right to return). எந்த நல்லிணக்கமும் அந்த உரித்தை ஏற்று, அங்கீகரித்து, நடைமுறைப்படுத்துவதின் மீதுதான் கட்டியெழுப்பட முடியும். இது அநுரகுமார திஸநாயக்கா தலைமையிலான ஆட்சிப் பீடத்துக்கு நன்கு தெரியும்.

தமிழர் தாயகத்திலிருந்து யுத்தத்தின் காரணமாக இடம் பெயர்ந்தவர்கள் மீண்டும் தங்கள் தாயகத்துக்கு திரும்புவதற்கு உரித்துடையவர்கள். அந்த உரித்தை அங்கீகரித்து, ஏற்றுக்கொண்டு, அதற்கான வாய்ப்பை அளித்தால், ஏற்கனவே யுத்தத்தினால் சின்னாபின்னமாகி சிதறி கிடக்கும் தமிழர் தேசம் மீண்டும் கட்டுறுதியோடு நிமிர்ந்து எழுந்து விடும் என்று கருதும் சிங்களம், அதனால் இடம்பெயர்ந்தவர்கள் தாயகம் திரும்புவதற்கு முட்டுக்கட்டை போடும் சதி நாச வேலைகளைத் திட்டமிட்டு ஆரம்பித்திருக்கிறது.

தமிழர் தேசத்தின் தனித்துவத்துக்கான அடிப்படை அவர்களுடைய தாயக நிலம். அதைக் கபளீகரம் செய்வதன் மூலம் தமிழர் தேசத்தின் கட்டுறுதியை நாசம் செய்வதற்காக சத்தம் சந்தடியின்றி வர்த்தமானி அறிவிப்புகளை விடுத்த பேரினவாத அரசு, அது பெரும் விவகாரமாக உருவெடுத்து, தமிழர் எதிர்ப்பு உச்சமான பொழுது அதைக் கை வாங்கி இருக்கின்றது.

இப்போது, 90 களின் ஆரம்பத்தில் யுத்தத்தின் காரணமாக இடம் பெயர்ந்து தமிழகத்தில் தஞ்சம் புகுந்த லட்சத்துக்கு அதிகமான ஈழத் தமிழர்களில், 10 ஆயிரம் தமிழர்கள் தாயகம் திரும்புவதற்கு இணக்கம் தெரிவித்து, அதற்கான ஏற்பாடுகளை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஊடாக மேற்கொண்டு, நாடு திரும்பத் தயாராகி வருகின்றார்கள். அப்படி அவர்கள் திரும்பினால் தமிழர் தாயகம் மேலும் பலமாகி கட்டுறுதியாகிவிடும் என்று அஞ்சும் சிங்களத் தலைமை, அப்படி அகதிகள் திரும்புவதற்கு ஆப்படிக்கும் வேலையை ஆரம்பித்து இருக்கின்றது.

ஐ.நா. அகதிகள் தூதரகம் ஊடாக விண்ணப்பித்து, அவர்களின் ஏற்பாட்டில் சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தினால் கடவுச்சீட்டு உட்பட முழு விடயங்களும் வழங்கி அங்கீகரிக்கப்பட்டு, இந்திய இணக்கத்துடன் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட அகதி ஒருவரை - அதுவும் 75 வயதான முதியவர் ஒருவரை - 38 ஆண்டுகளுக்கு முன்னர் அகதியாக உரிய கடவுச்சீட்டு இன்றி நாட்டை விட்டு வெளியேறினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்து விளக்க மறியலில் அடைத்திருக்கின்றது அநுரகுமாரவின் அரசு.

யுத்தத்தின் வடுக்களினால் ஏற்பட்ட முரண்பாடுகளைக் களைந்து, சமதர்மம், சமநீதி, சமத்துவம் என்ற பெயர்களில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவோம் என்று தேசிய மக்கள் சக்தி நடத்தும் நாடகத்தின் மற்றொரு அடாவடி அங்கம் இது.

திசைகாட்டி சின்னத்தில் சிங்களப் பேரினவாதத்திற்கு பந்தம் பிடிக்கும் தமிழ்க் கைக்கூலிகள் இந்த அடாவடித்தனத்தை எவ்வாறு நியாயப்படுத்தப் போகிறார்கள்? இதுதானா அநுரகுமார திஸநாயக்க காண விரும்பும் நல்லிணக்கம், சமதர்மம், சமநீதி, சமத்துவ சீதுவம்? கொழும்புக்குக் கூஜா தூக்கும் முகமறியா தமிழ் அரசியல்வாதிகள் தங்கள் மக்களுக்கு பதில் கூற வேண்டிய விடயம் இது...!

# பலத்த காற்றின் வேகத்தால் வாவிக்குள் வீசப்பட்ட ஓட்டோ!





(உடப்பு க.மகாதேவன்)

அநுராதபுரத்தில் வீசிய பலத்த காற்றின் வேகம் காரணமாக திஸ்ஸவாவிக்கு அருகிலுள்ள வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ ஒன்று வாவிக்குள் தூக்கி வீசப்பட்டுள்ளது.

இதன் போது ஓட்டோக்குச் சிறிய சேதம் ஏற்பட்டுள்ளது.

# துன்னாலைப் பகுதியில் இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை!

(த.சுபேசன்)

வடமராட்சி, துன்னாலைப் பகுதியில் நீண்ட காலமாக இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று மதுவரித் திணைக்களத்தினரால் முற்றுகையிடப்பட்ட நிலையில் பெருமளவான கசிப்பு மற்றும் கோடா ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை மற்றும் சங்கானை மதுவரித்திணைக்களத்தினர் இணைந்து முன்னெடுத்த இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 460 லீற்றர் கோடா மற்றும் 39 லீற்றர கசிப்பு ஆகியன மீட்கப்பட்டன.

கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட பெருமளவான உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது சந்தேக நபர்கள் தப்பித்துள்ள நிலையில் அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




யாழ். மாவட்ட உதவி மதுவரி ஆணையாளர் மாளவி பத்திரன மற்றும் மதுவரி அத்தியட்சகர் ரணவீர ஆகியோரின் ஆலோசனைகளுக்கு அமைவாக மதுவரிப் பொறுப்பதிகாரி வே.ரஷிகரன் தலைமையிலான குழுவினர் இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# வவுனியா கல்மடு வித்தியாலயத்தில் கலை, கலாச்சார, பண்பாட்டு விழா!

(கி.வசந்தன்)

வவுனியா கல்மடு மகாவித்தியாலயத்தில் கலை, கலாச்சார மற்றும் பண்பாட்டுப் பெருவிழா நேற்று (29) பாடாசாலை அதிபர் சு.முகுந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பிரதம விருந்தினர்கள் மாலை அணிவித்து பாரம்பரிய முறைப்படி அழைத்து வரப்பட்டனர்.

அத்துடன் தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்களான கிறீஸ் மரம் ஏறுதல், தலையணை சண்டை உட்பட பல்வேறு விளையாட்டுக்கள் இடம்பெற்றன.

மாணவர்களுக்குக் கைவிஷேடங்களும் வழங்கப்பட்டன. உற்பத்திப் பொருள் சந்தையும் இடம்பெற்றிருந்தது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாமன், வவுனியா வடக்கு கோட்டக் கல்வி அதிகாரி சசிகுமார் மற்றும் அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.















# போக்குவரத்து விடயங்களில் கவனம் எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்து

## கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் வர்ண ஜெயசுந்தர

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 மாதங்களில் வீதி விபத்தில் 32 பேர் உயிரிழந்துள்ளனர். இது மிகவும் கவலையளிக்கிறது. போக்குவரத்து விடயத்தில் கவனம் செலுத்தப்படவேண்டும். மாவட்டத்தில் வீதி நடை பாதையை ஆக்கிரமித்துள்ள வர்த்தகர்கள் உடனடியாக அதனை அகற்றவேண்டும். அதேபோல் மோட்டார் சைக்கிளில் தலைகவசம் இல்லாது பயணிப்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பொலிஸாருக்குக் கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் வர்ண ஜெயசுந்தர இவ்வாறு கட்டளை பிறப்பித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட வீதி பாதுகாப்பு குழு கூட்டம் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜி.லலித் லீலாரத்தின தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் வர்ண ஜெயசுந்தர மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்தில் கடந்த 2024 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதிவரை 611 வீதி விபத்துகளில் 72 பேர் உயிரிழந்தனர். 1975 பேர் மது போதையில் வாகனம் செலுத்தியுள்ளனர்.

2025 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மே 25 ஆம் திகதி வரை 215 வீதி விபத்துக்களில் 32 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்துக்களுக்கு முதலாவது காரணம் வேகமாக வாகனங்களை செலுத்தியமை மற்றும் மது போதையில் வாகனங்களை செலுத்தியமையே.

எனவே மாவட்டத்தில் கரையோரப் பிரதேசமான களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி, மட்டக்களப்பு நகர், ஏறாவூர். சந்திவெளி, வாழைச்சேனை, ஓட்டுமாவடி போன்ற பிரதேசங்களில் விபத்துக்கள் அதிகரித்துள்ளது அதன் பிரகாரம் குறித்த பிரதேசங்களில் பெற்றோர்கள் தலைகவசம் அணிந்து கொண்டு பிள்ளைகளுக்கு தலைகவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் 3 பேரை ஏற்றிக் கொண்டு பயணிக்கின்றனர்.

அதேபோல பலர் தலைக்கவசம் இன்றி 3 பேருக்கு மேல் பயணிப்பது போக்குவரத்து சட்டத்துக்கு ஏதிரானது. ஆகவே இவ்வாறு பயணிப்பவர்களுக்குத் தலைகவசம் அணியுமாறு 7 நாள்கள் கால அவகசம் வழங்குங்கள். அதன் பின்னர் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுங்கள்.

போக்குவரத்து சட்டம் எல்லோருக்கும் ஒன்றுதான். காத்தான்குடிக்கு ஒரு சட்டம் இல்லை. எனவே போக்குவரத்து சட்டத்தை மீறி வாகனங்களை செலுத்துபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, இந்த குறித்த பிரதேசங்களில் வீதி நடை பாதையை ஆக்கிரமித்துள்ள வர்தகர்கள் அதனை உடனடியாக அகற்ற வேண்டும். அதற்கு 10 நாள்கள் அவகாசம் வழங்கப்படும். அதனை மீறி நடபாதையை ஆக்கிரமிப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தந்தப் பொலிஸ் நிலைய பொலிஸாருக்குக் கட்டளையிட்டார்.

இந்த வீதி பாதுகாப்பு கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ள போதும் பொது மக்களின் வீதி பாதுகாப்புக்குப் பொறுப்புக் கூறவேண்டிய சிலர் வருகை தரவில்லை. எனவே அடுத்த கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தும் வராததிணைக்கள மற்றும் தனியர் பஸ் சங்கம், ஓட்டோ சங்கங்கள் ஆகியோருக்கு எதிராக உரியவர்களிடம் முறைப்பாடு செய்யப்படும்.- என்றார்.



# பாரம்பரியமாக வண்ணக்கர் தலைமையில் உகந்தமலை முருகன் ஆலயம் செயற்படும்!

## வழக்கின் தீர்மானம் பற்றி சிரேஷ்ட சட்டத்தரணி சிவரஞ்சித் தெரிவிப்பு





(வி.ரி.சகாதேவராஜா)

கடந்த மூன்று வருட காலமாக லாகு கலை பிரதேச செயலகத்தின் கீழ் பரி பாலிக்கப்பட்டு வந்த வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலய நிர்வாகம், இனிமேல் பாரம் பரிய முறைப்படி வண்ணக்கர் தலைமை யில் செயற்படும்.

இவ்வாறு கிழக்கின் பிரபல சிரேஷ்ட சட்டத்தரணி நடராஜா சிவரஞ்சித் தெரி வித்தார்.

உகந்தமலை முருகன் ஆலயம் தொடர்பாகப் பொத்துவில் மாவட்ட நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் நடைமுறையில் உள்ளன.

அவற்றில் ஒரு வழக்கு கடந்த வாரம் பொத்துவில் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற போது ஓர் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்மானம் நீதிபதியால் கட்டளையிடப் பட்டிருக்கிறது.

அந்த வழக்குகளில் ஆலயம் சார் பில் சட்டத்தரணி நடராஜா சிவரஞ் சித் ஆஜராகி வருகிறார்.

நீதிமன்ற தீர்மானம் தொடர்பாக சட்டத்தரணி நடராஜா சிவரஞ்சித் கூறுகையில்,

உகந்தமலை முருகன் ஆலயம் தொடர்பாக மூன்று வழக்குகள் பொத்து வில் மாவட்ட நீதிமன்றத்தில் சம காலத்தில் சென்று கொண்டிருக்கின் றன. அதுக்கு நான் ஆஜராகி வரு கின்றேன்.

ஆலய நிர்வாக செயற்பாடுகள் மீண்டும் வண்ணக்கர் தலைமை யில் கொண்டு வர வேண்டும் என்ற ரீதி யிலே தொடரப்பட்ட வழக்கு கடந்த வாரம் நீதிமன்றிலே எடுத்து கொள்ளப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் ஏற்ற நீதிபதி இரு சாராரும் இணக்கப் பாட்டுக்கு வந்தமையால் பொதுவான தீர்மானத்தை வழங்கியிருந்தார். இரு சாராரினதும் இணக்கப்பாட்டால் ஆலய நிர்வாகம் இனிமேல் பாரம்பரிய முறைப்படி வண்ணக்கர் தலைமை யில் இயங்கும் என்றும் நிதி செயல்பாடு கள் பிரதேச செயலாளர் கண்காணிப் பில் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.- என்றார்.

அதன்படி ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க சுதா இனிமேல் பாரம்பரிய சம்பிரதாயங்களைக் கடைப் பிடித்து ஆலயத்தை வழிநடத்தவுள்ளார் என்றும் புதிய நிர்வாகம் மிக விரை வில் தெரிவு செய்யப்படும் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.




# திருமலை அரச உத்தியோகத்தர்களுக்கு மத்தியஸ்தம் தொடர்பான விழிப்புணர்வு



(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு மத்தியஸ்தம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் திருகோணமலை மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சித் திட்டமானது மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன் தலைமையில் மாவட்ட மத்தியஸ்த உத்தியோகத்தர் பு.பவானியின் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.

கலந்துரையாடல்கள் மூலம் பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளப் பயன்படும் மத்தியஸ்தமுறை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமாக இது அமைந்திருந்தது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக மத்தியஸ்த உத்தியோகத்தர்களான ஏ.எஸ்.எம்.நிஜாம், திருமதி. நிள்வான் பாத்திமா, என்.எப். நஸ்ரின் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு விளக்கவுரைகளை வழங்கினர்.

இந்தச் செயலமர்வில் மாவட்ட மற்றும் பிரதேச செயலக மத்தியஸ்த உத்தியோகத்தர்கள்,அரச உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# காற்றாலை மின் உற்பத்தி, கனிய மணல் அகழ்வுக்கு மன்னார் அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் எதிர்ப்பு!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரனின் நெறிப் படுத்தலின் கீழ் மாவட்ட அபிவிருத் திக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சரு மான உப்பாலி சமரசிங்க தலைமை யில் மன்னார் மாவட்டச் செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான றிசாத் பதியுதீன், காதர் மஸ்தான், ரவிகரன், முத்து முஹம்மட், ஜெகதீஸ்வரன் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத் தில் மாவட்ட அபிவிருத்தி சார்ந்த பல வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

இதன்போது மன்னார் மாவட்டத் தில் புதிதாக முன்னெடுக்கப்பட்டுவரும் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்துக்குப் பல்வேறு தரப்புக்களால் எதிர்ப்பு தெரி விக்கப்பட்டது.

அத்துடன் மன்னாரில் கனிய மணல் அகழ்வு முன்னெடுக்க மேற்கொள் ளப்பட்டு வரும் செயற்பாடுகளுக்கும் இந்தக் கூட்டத்தில் எதிர்ப்பு தெரிவிக் கப்பட்டது.

பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் கனிய மணல் அகழ்வுச் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். இதனால் மன்னார் தீவில் ஏற்படப்போகும் அபாய நிலை குறித் தும் தெரியப்படுத்தினார். மன்னார் தீவில் கனிய மணல் அகழ்வுக்குத் தமது எதிர்ப்பையும் தெரிவித்தார்.

# வெட்டுக் காயங்களுடன் குடும்பப் பெண் மர்மமான முறையில் சடலமாக மீட்பு!

## பெரிய நீலாவணையில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)

வெட்டுக் காயங்களுடன் மர்ம மான முறையில் குடும்பப் பெண் ஒருவரின் சடலம் பெரிய நீலாவணை பொலிஸாரால் இன்று (30) மீட்கப் பட்டுள்ளது.

பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விஷ்ணு கோயில் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் தனித்திருந்த 37 வயது மதிக்கத்தக்க பெண்ணே இவ்வாறு சடலமாக மீட் கப்பட்டுள்ளார்.

இரு பிள்ளைகளின் தாயான குறித்த பெண்ணின் கழுத்து மற்றும் தலை உள்ளிட்ட பகுதில் பல வெட்டுக் காயங்கள் காணப்படுகின்றன ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.



மரணமடைந்த குடும்பப் பெண்ணின் கணவர் வெளிநாடு ஒன்றில் தொழில் நிமிர்த்தம் தங்கியுள்ளார்.

கொலை இடம்பெற்ற வீட்டில் பொருத் தப்பட்டிருந்த சிசிடிவி காணொளிகளை சேமிக்கும் கருவி கொலையாளியால் எடுத்துச்செல்லப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை தொடர்பில் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்ச- கர் எம்.கே.இப்னு அஸார் சம்பவ இடத் துக்குச் சென்று மேற்பார்வை செய்தார். அம்பாறை தடயவியல் பொலிஸார் உட்பட பெரிய நீலாவணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# இலங்கைக்கு கடத்துவதற்காகப் பொதியிடப்பட்ட 175 கிலோ வாசனைப் பொருள் பொதிகள் மீட்பு!

தங்கச்சிமடம் அருகே இலங்கைக்கு கடத்துவதற்காக வீட்டில் பதுக்கி வைக் கப்பட்டிருந்த 6 லட்சம் ரூபா மதிப்பிலான 175 கிலோ ஏலக்காய் மூட்டைகளை இன்று (30) அதிகாலை ஒருங்கிணைந்த குற்றப்புலனாய்வு பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்ட கடற்கரை பகுதி இலங்கைக்கு மிக அருகில் இருப்ப தால் இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லை ஊடாக இலங்கைக்கு நாட்டுப் படகில் கஞ்சா, கடல் அட்டை, பீடி இலை பண்டல்கள், ஏலக்காய், சுக்கு, செருப்பு, திமிங்கலம் துடுப்பு, உள்ளிட்டவை கடத் தப்பட்டு வருகின்றன என்று தெரிவிக் ப்பட்டுள்ளது.



இந்த நிலையில் தங்கச்சிமடம் கடற்கரையில் இருந்து இலங்கைக்கு நாட்டுப் படகில் ஏலக்காய், சுக்கு, வெளி நாட்டு சிகரெட் உள்ளிட்ட பொருள்கள் கடத்த இருப்பதாக ராமநாதபுரம் ஒருங் கிணைந்த குற்ற புலனாய்வு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இன்று (30) திடீர் சோதனை நடத்தியுள்ளனர்.

இதன்போது அங்கிருந்த வீட்டில் இலங்கைக்கு படகில் கடத்திச் செல்வ தற்காக 7 பொதிகளில் 175 கிலோ ஏலக் காய் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து ஏலக்காய் மூடைக ளைப் பறிமுதல் செய்து தங்கச்சிமடம் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்து வந்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாகத் தலைமறைவான வீட்டின் உரிமையாளரையும் பொலி ஸார் தீவிரமாக தேடி வருகின்றமை குறிப் பிடத்தக்கது.





# ஞானச்சுடர் 329 ஆவது மலர் வெளியீடும் உதவிகளும் சந்நிதியான் ஆச்சிரமத்தில்!

ஞானச்சுடர் 329 ஆவது மலர் வெளியீடும் உதவிகளும் சந்நிதியான் ஆச்சிரமத்தில, சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், இன்று (30) வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

ஞானச்சுடர் வைகாசி மாத 329 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வில், வெளியீட்டுரையை இளைப்பாறிய கிராமசேவையாளர் திருமதி சுதர்சன் அமுதகலாவும், மதிப்பீட்டுரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தியும் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கப்பட்டன.

உதவித் திட்டங்களாக, 96 ஆயிரம் ரூபா பெறுமதியான 02 சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

ஏழாலை மத்தி, ஏழாலை பகுதியை சேர்ந்த மகாஜானக் கல்லூரியல் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவி, பாற்பண்ணை திருநெல்வேலியை சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பத்தினர் ஆகியொருக்கு வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்டன.

கொக்குவில் மேற்கு, கொக்குவிலை சேர்ந்த பெற்றோர்களை இழந்தவர்க்கு வீடு திருத்தப் பணிக்காக 25 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் காக்கைதீவு சிவசக்தி அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களுக்கு 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

சங்கானை பிரதேச வைத்தியசாலையின் கோரிக்கைக்கு அமைவாக, நரம்பியல் புனருத்தாபன பிரிவுக்கு உரிய பக்கவாத நோயாளிகளுக்கான சிகிச்சை இயன் மருத்துவருக்கு வேதனம் வழங்குவதற்கு 70 ஆயிரம் ரூபா வைகாசி மாத நிதி வழங்கப்பட்டது.











# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிச்சீலை!

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த பெருந் திருவிழாவுக்கான கொடிச்சீலை யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கேதீஸ் வரம் ஆலயத்துக்கு இன்று (30) எடுத்துச் செல்லப்பட்டது.

கொடிச்சீலை உபயகாரர்களான திருநெல்வேலி, கென்னடி வீதியைச் சேர்ந்த சண்முகநாதன் கபிலன் வீட் டில் இருந்து கொடிச்சீலை எடுத்து செல லப்பட்டு திருநெல்வேலி வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தில் வைக்கப்பட்டு அங்கு சிறப்புப் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து திருக்கே தீஸ்வர ஆலயத்துக்குக் கொடிச் சீலை வாகனத்தில் எடுத்து செல்லப்பட்டது.

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வரு டாந்தப் பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

1982ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்தே செங்குந்த மரபினரால் திருக்கேதீஸ்வரம் ஆல யத்துக்கு கொடிச்சீலை வழங்கப்பட்டி ருந்த நிலையில் யுத்த காலத்தில் இந்த முறைமை கைவிடப்பட்டிருந்தது.

2022 ஆம் ஆண்டு திருக்கேதீஸ் வர ஆலய கும்பாபிஷேகம் இடம்பெற்றி ருந்த நிலையில், சுமார் 40 வருடங் களுக்குப் பின்னர் 3 ஆவது முறையாக இந்த முறை கொடிச்சீலை வழங்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.










# ஒட்டுசுட்டானில் தேனீக்கள் கொட்டியதில் 78 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பாதிப்பு!

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் இன்று (30) தேனீக்கள் கொட்டியதில் 78இற்கும் மேற்பட்ட மாணவர்களும், ஆசிரியர்கள் சிலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தேனீ கொட்டுக்கு இலக்கான மாணவர்களின் நிலமைகளைப் பார்வையிட்டார்.

அத்தோடு பாடசாலை வளாகத்திலுள்ள தேனீ கூடுகளை அகற்றாமல் அசமந்தமாகச் செயற்பட்டமைக்கு வனஜீவராசிகள் திணைக்களத்தினரிடம் நேரடியாகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மிகக் கடுமையாக எச்சரித்தார். பாடசாலை வளாகத்திலுள்ள தேனீ கூடுகளை உடனடியாக அகற்றுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய, பாடசாலைக் கட்டடத் தொகுதியிலிருந்த பப்பரக்கொப்பான் எனும் தேனீக்கூடு, தற்போது வீசிவரும் கடுமையான காற்றால் உதிர்ந்து வீழ்ந்துள்ளது. இதனால் பாடசாலைமாணவர்கள் மற்றும், ஆசிரியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் பாடசாலையில் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த 78 இற்கும் மேற்பட்ட மாணவர்களும், ஆசிரியர்கள் சிலரும் பாதிக்கப்பட்டு ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதில்45 வரையான மாணவர்களும், சில ஆசிரியர்களும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்டுள்ளனர்.

அதிலும் குறிப்பாக இரு மாணவர்களும், ஒரு ஆசிரியருமாக மூவர் மிகமோசமாக தேனீ கொட்டுக்கு ஆளான நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டவர்களின் நிலை தேறியுள்ளதாகவும், எதுவித உயிர் பாதிப்புக்களும் இல்லை எனவும் வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இது தொடர்பில் அறிந்தவுடன் உடனடியாக ஒட்டுசுட்டான் வைத்தியசாலை மற்றும், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு விரைந்து அங்கு சிகிச்சைபெற்றுவரும் மாணவர்கள் ஆசிரியர்களைப் பார்வையிட்டார்.

ஒட்டுசுட்டான் மாகாவித்தியாலய கட்டடங்களில் காணப்படும் தேனீ கூடுகளை உடனடியாக அகற்றுமாறு முல்லைத்தீவு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஏற்கனவே பாடசாலைச் சமூகம் கடந்த 02.09.2024 ஆம் திகதிய கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும் தேனீ கூடுகளை அகற்றுவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் பாடசாலைச சமூகம் முறையிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியாவில் சீரற்ற காலநிலையால் போக்குவரத்துப் பாதிப்பு, மின் துண்டிப்பு!

**(க.கிஷாந்தன்)**

நுவரெலியா பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் கனமழை மற்றும் வீசும் பலத்த காற்று காரணமாக, நானுஓயா உட ரதெல்ல பிரதான வீதியில் நேற்று (29) பாரிய மரம் ஒன்று முறிந்து விழுந்ததில், ஒரு வீடு பகுதியளவு சேதமடைந்துள்ளதோடு, வீதியின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது என்று நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான வீதியில் விழுந்த மரத்தை நானுஓயா பொலிஸ் அதிகாரிகள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் இணைந்து அகற்றும் வரை, நேற்று பிற்பகல்வரை போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

அத்தோடு, பகுதியளவு சேதமடைந்த வீட்டில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

வீசும் பலத்த காற்று மற்றும் மழை காரணமாக, ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியிலும் மற்றும் இணை வீதிகளிலும் வாகன சாரதிகள் கவனமாக வாகனங்களை செலுத்துமாறு நானுஓயா பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேலும், இன்று (30) காலை கொட்டகலை டிரேட்டன் கொலனி பகுதியிலும் மரம் ஒன்று சரிந்து விழுந்ததில் வீடு ஒன்று முழுமையாக சேதமமைந்துள்ளது.

யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனவும், பொருள்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பெய்துவரும் கன மழை காரணமாக, இன்று (30) அதிகாலை ஒரு மணி முதல் கினிகத் தேனை–நோர்டன்பிரிட்ஜ் பிரதான வீதியில் 33,000 வாட் உயர் மின்னழுத்த மின்கம்பி கொண்ட ஒரு மின்கம்பம் வீழ்ந்துள்ளது. மரங்கள் மற்றும் பல பாறைகளும் விழுந்துள்ளன என்று நோர்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹுலாங்வங்குவ எனும் பகுதியில் இந்த மரங்களும் மின் கம்பிகளும் விழுந்துள்ளன. இந்த சூழ்நிலையில், வீதியின் போக்குவரத்து சீரடையும்வரை ஹட்டன் வீதியின் ஊடாக வாகனங்களைச் செலுத்துமாறு நோர்டன்பிரிட்ஜ் பொலிஸார் சாரதிகளைக் கேட்டுள்ளனர்.

நோர்டன்பிரிட்ஜ் முதல் கினிகத் தேனை வரையிலான உயர் மின்னழுத்த மின்கம்பி அமைப்பு சரிந்ததால், நோர்டன்பிரிட்ஜ் மற்றும் கினிகத்தேனை பகுதிகளில் மின்சாரம் முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளது என்று மின்சார சபை தெரிவித்துள்ளது.

அத்தோடு, காசல்ரீ பகுதிகளில் வீசிய பலத்த காற்றுடன் கூடிய கனமழை காரணமாக, ஹட்டன்–நோர்டன் பிரிட்ஜ் பிரதான வீதியில் பல இடங்களில் பல பெரிய மரங்கள் விழுந்துள்ளன. இதனால் இன்று (30) காலை 9 மணி முதல் வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது என்று ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லெதண்டி தோட்ட பகுதியில் மரம் விழுந்துள்ளது. மின்சார சபை ஊழியர்கள் விழுந்த மரங்களை வெட்டத் தொடங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிரதான வீதியில் விழுந்த மரங்களை வெட்டப்படும் வரை வீதியில் பயணிக்கும் வாகனங்கள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

இதேவேளை, நோர்டன்பிரிட்ஜ் மின்சார சபையின் ஊடாக வழங்கப்படும் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டதன் காரணமாக ஹட்டன் வெலிஓயா தோட்டத்தின் மேற்பிரிவில் உள்ள சுமார் 300 குடும்பங்கள் மோசமான வானிலை காரணமாகவும், மின்சாரம் இல்லாததாலும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

# கமல் மன்னிப்பு கேட்காவிட்டால் ‘தக் லைஃப்’ படம் வெளியாகாது

## கர்நாடக திரைப்பட சம்மேளனம் எச்சரிக்கை

கன்னட மொழி குறித்த தனது கருத்துக்கு நடிகர் கமல்ஹாசன் பகிரங்க மன்னிப்பு கேட்காவிட்டால் அவ ரது ‘தக் லை:ப்’ திரைப்படம் கர்நாடகாவில் வெளியாகாது என கர்நாடக திரைப்பட வர்த்தக சம்மேளனம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக நடந்த ஆலோசனையின் முடிவில் செய்தியாளர்களை சந்தித்த கர்நாடக திரைப்பட வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் நரசிம்மலு கருத்து தெரி விக்கையில்,

“பல கன்னட அமைப்புகள் கமல்ஹாசனின் படத்தை தடை செய்யக் கோரிக்கை வைத்துள்ளன. எனவே, நாங்கள் அவர்களை சந்தித்து இந்த விஷயத்தைப் பற்றி ஆலோசித்தோம். மேலும் கமல்ஹாசன் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்று முடிவு செய்துள்ளோம். அவர் செய்தது தவறு என்பதை நாங்கள் ஒப்புக்கொள்



கிறோம், மேலும் அவரைச் சந்தித்துப் பேசவும் முயற்சிக்கிறோம்.

கமல்ஹாசன் மீது எங்களுக்கு எந்த அனுதாபமும் இல்லை. இன்று அல்லது நாளை அவர் பகிரங்க மன்னிப்பு கேட்கவில்லை என்றால், கன்னட அமைப்புகளுக்கு ஆதரவு கொடுத்து, கடுமையாகப் போராடுவோம். அவர் பகிரங்க மன்னிப்பு கேட்காவிட்டால் எந்தச் சூழ்நிலையிலும் படத்தை வெளியிட அனுமதிக்க மாட்டோம்.” என்று தெரிவித்துள்ளார்.

மணிரத்னம் இயக்கத்தில் நடிகரும் மக்கள் நீதி மய்யத்தின் தலைவருமான கமல்ஹாசன் நடித்துள்ள ‘தக் லை:ப்’ திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா அண்மையில் சென்னையில் நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கன்னட நடிகர் சிவராஜ்குமார் பங்கேற்றார். விழாவில் கமல்ஹாசன் பேசுகையில், “கன்னட நடிகர் ராஜ் குமாருடைய குடும்பம் அந்த ஊரில் (கர்நாடகாவில்) இருக்கும் என்னுடைய குடும்பம். தமிழில் இருந்து பிறந்தது தான் கன்னடம். அதனை நீங்களும் (சிவராஜ்குமார்) ஒப்புக் கொள்வீர்கள் என நம்புகிறேன்” என தெரிவித்தார்.

கமல்ஹாசனின் இந்த கருத்துக்கு கர்நாடகாவில் கன்னட ரக்ஷன வேதிகே, கன்னட சலுவளி உள்ளிட்ட அமைப்புக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

# நடிகர் கமல்ஹாசனுக்கு ஆதரவாக யாரும் குரல் கொடுக்காதமை ஏன்?



## சீமான் கேள்வி

கர்நாடகாவில் கமலுக்கு எதிராக கன்னட அமைப்புகள் போராடும்போது, தமிழகத்தில் அவருக்கு ஆதரவாக யாரும் குரல் கொடுக்காதது ஏன் என்று நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

விருதுநகரில் நேற்று நடைபெற்ற கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற சீமான், பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“ தமிழில் இருந்துதான் கன்னடம் பிறந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. கமல்ஹாசன் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள், அதை ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும்.

கர்நாடகாவில் கமலுக்கு எதிராக கன்னட அமைப்புகள் போராடும்போது, தமிழகத்தில் அவருக்கு ஆதரவாக யாரும் குரல் கொடுக்காதது ஏன்? தமிழக முதல்வராக இருந்துகொண்டு, கர்நாடக தேர்தலில் காங்கிரஸுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்த ஸ்டாலின், கர்நாடகாவுக்கு எதிராக எப்படி கருத்து கூறுவார்.” என்றார்.

# கமல்ஹாசன் கருத்துக்கு சிவராஜ்குமார் ஆதரவு

கன்னட மொழி குறித்த நடிகர் கமல்ஹாசனின் கருத்துக்கு கன்னட நடிகர் சிவராஜ்குமார் ஆதரவு தெரிவித்துள்ளார்.

சென்னையில் அண்மையில் நடைபெற்ற ‘தக் லை:ப்’ திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழாவில் நடிகரும் மக்கள் நீதி மய்யத்தின் தலைவருமான கமல்ஹாசன் பேசும்போது, “தமிழில் இருந்து பிறந்ததுதான் கன்னடம்”என குறிப்பிட்டார்.

இதற்கு கர்நாடக முதல்வர் சித்தராமையா, பா.ஜ.க. மாநில தலைவர் விஜயேந்திரா மற்றும் கன்னட அமைப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்று பெங்களூரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் நடிகர் சிவராஜ்குமார் கருத்து தெரிவிக்



கையில்,

“கன்னட மொழி மீதும் பெங்களூர் மாநகரின் மீதும் கமல்ஹாசன் மிகுந்த மதிப்பு கொண்டிருக்கிறார். நான் அவருடைய பெரிய ரசிகன். இந்தவிவகாரம் குறித்து 100 சதவீதம் உரிய விளக்கத்தை கொடுப்பார். கன்னட மொழியின் மீதான பாசம் என்பது வாழ்க்கை முழுவதும் இருக்க வேண்டும். எங்கு சென்றாலும் கன்னடத்தை நேசிக்க வேண்டும். கேமரா முன்பாக மட்டும் நேசிக்க கூடாது. வெறும் பேச்சுக்காக கன்னட பாசத்தை கேமரா முன்பாக காட்ட கூடாது.

இங்கே கன்னடத்துக்காக பேசுவதாக சொல்பவர்கள் கன்னட திரையுலகுக்கு என்ன செய்தார்கள் என யோசித்து பார்க்க வேண்டும். பத்திரிகையாளர்கள் பெரிய நடிகர்களின் படத்துக்கு மட்டும் ஆதரவாக செயல்படுகிறார்கள். புதிய நடிகர்களின் படங்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறார்களா? கமல்ஹாசன் ஏற்கெனவே கன்னட திரையுலகுக்கு நிறைய பங்களிப்பு செய்துள்ளார். அவரை பற்றி நிறைய பேச வேண்டியதில்லை.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# பிரம்மோஸ் ஏவுகணைகள் மூலம் பாக். விமான தளங்கள் மீது தாக்குதல்

## பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் ஒப்புதல்

இந்திய இராணுவம் பிரம்மோஸ் ஏவுகணைகள் மூலம் பாகிஸ்தான் விமான தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது என்று அந்த நாட்டு பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

துருக்கி, ஈரான், அஜர்பைஜான், தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளில் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறார். அவர் நேற்று அஜர்பைஜானின் லாசின் நகரிற்கு சென்றிருந்தார். அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில்



அவர் உரையாற்றுகையில்,

"கடந்த 10 ஆம் திகதி அதிகாலையில் தொழுகையை முடித்த பிறகு இந்தியா மீது தாக்குதல் நடத்த பாகிஸ்தான் இராணுவம் திட்டமிட்டு இருந்தது. அதாவது அதிகாலை 4.30 மணிக்கு பிறகு தாக்குதலை தொடங்க திட்டமிட்டு இருந்தோம். ஆனால் அதற்கு முன்பாக இந்திய இராணுவம் பிரம்மோஸ் ஏவுகணைகள் மூலம் பாகிஸ்தான் விமானப் படை தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது. இந்திய இராணுவ தாக்குதல் குறித்து எங்களது இராணுவ தளபதி ஆசீம் முனிர் அதிகாலையில் என்னிடம் தகவல் தெரிவித்தார்.

நாங்கள் தாக்குதல் நடத்துவதற்கு முன்பாக இந்திய இராணுவம் தாக்குதலை தொடங்கிவிட்டது." என்றார்.

## ட்ரம்பின் வரி விவகாரம்:

# சர்வதேச வர்த்தக நீதிமன்றத்தின் தீர்ப்பை இடைநிறுத்திய மேன்முறையீட்டு நீதிமன்றம்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் விதிக்கப்பட்ட உலக நாடுகளுக்கான தீர்வை வரியை தற்காலிகமாக அமுலில் வைத்திருக்க, அமெரிக்காவின் மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை உள்ளிட்ட உலக நாடுகள் பலவற்றுக்கு டொனால்ட் ட்ரம்ப் பெருமளவிலான தீர்வை வரியை அண்மையில் அறிவித்தார்.

இதனை அடுத்து சர்வதேச ரீதியாக பொருளாதாரத்தில் பெரும் பாதக விளைவுகள் ஏற்பட்டன.

இந்தநிலையில் அமெரிக்காவின் மாநில நிர்வாகங்கள் சில, அமெரிக்காவின் சர்வதேச வர்த்தக நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தன.

அதன் விளைவாக, மேற்படி வரியை விதிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு இல்லை என்றும், அமெரிக்க காங்கிரஸுக்கே அந்த அதிகாரம் இருப்பதாகவும் தீர்ப்பளிக்கப்பட்டது.



இதனை எதிர்த்து ட்ரம்ப் நிர்வாகம் மேன்முறையீடு செய்திருந்த நிலையில், தற்காலிகமாக குறித்த வரியை வசூலிப்பதற்கு அனுமதிப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது.

எனினும் அடுத்த மாதம் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளான இருதரப்பும் தங்களது சமர்ப்பணங்களை எழுத்து மூலம் முன்வைக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# போர் நிறுத்தத்துக்கான அமெரிக்காவின் திட்டத்தை நிராகரித்த ஹமாஸ் அமைப்பு

புதிய காசா போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளின் விடுவிப்பு ஒப்பந்தத்திற்கான அமெரிக்காவின் சமீபத்திய திட்டத்தைத் தாம் நிராகரிப்பதாக ஹமாஸ் அமைப்பின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கான அமெரிக்காவின் விசேட தூதுவர் ஸ்டீவ் விட்கோப்பின் திட்டத்தில் இஸ்ரேல் கையெழுத்திட்டுள்ளதாகவும் ஹமாஸிடமிருந்து கிடைக்கப்பெறும் பதிலுக்காகக் காத்திருப்பதாகவும் வெள்ளை மாளிகை



நேற்று தெரிவித்தது.

60 நாள் போர் நிறுத்தம் மற்றும் இஸ்ரேலிய சிறைகளில் உள்ள பலஸ்தீன கைதிகளை விடுவிப்பதற்கு ஈடாக ஹமாஸ் இரண்டு கட்டங்களாக 10 பணயக்கைதிகளையும் 18 இறந்த பணயக்கைதிகளின் உடல்களையும் ஒப்படைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் போரை முடிவுக்குக் கொண்டுவருவது உள்ளிட்ட முக்கிய கோரிக்கைகளை இந்த திட்டம் பூர்த்தி செய்யவில்லை என ஹமாஸ் அமைப்பின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார் என பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

கனடா முரசு
வெள்ளிக்கிழமை 30/05/2025

**மாண்ட்ரியாலில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலி**

கனடாவின் மாண்ட்ரியல் நகரின் தெற்கு எல்லைப் பகுதியில் காணப்படும் லோங்கயிலில், இரவு வேளையில் ஒருவர் நெடுஞ்சாலையை கடக்க முயன்றபோது வாகனம் மோதி உயிரிழந்துள்ளார். 03



# கனடாவில் காட்டுத் தீ பரவல்: அவசர காலநிலை பிரகடனம்

**கனடாவில் சஸ்காட்சிவான் மற்றும் மனிடோபா மாநிலங்களில் பரவி வரும் காட்டுத் தீ காரணமாக அங்கு அவசரகால நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.**

**கனடாவின் சஸ்காட்சிவான் மற்றும் மனிடோபா மாநிலங்களில் கடந்த சில நாள்களாக பரவி வரும் காட்டுத் தீயானது தற்போது தீவிரமடைந்து வருகின்றது. குறிப்பாக 160 இற்கும் மேற்பட்ட இடங்களில் இக் காட்டுத்தீ பரவிவருகிறது.**

இதன் காரணமாக, அப் பகுதிகளில் நேற்று அவசர கால நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதோடு அப்பகுதிகளில் வசித்து வரும் சுமார் 17,000 மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கும் முயற்சியில் அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

இதேவேளை, இக்காட்டுத் தீயினால் இதுவரை இருவர் உயிரிழந்துள்ளதுடன், லட்சக்கணக்கான உடமைகள் சேதமடைந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அப்பகுதி மக்களை பாதுகாப்பாக இருக்குமாறு சஸ்காட்சிவான் மாநில முதலமைச்சர் ஸ்கோட் மோ வலியுறுத்தியுள்ளார்.

அதேசமயம் இக்காட்டுத் தீ காரணமாக அப்பகுதி முழுவதும் புகை மண்டலம் சூழ்ந்துள்ளமையால், மீட்பு பணிகளை மேற்கொள்வது மிகுந்த சவாலாகக் காணப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமல்லாது இப் புகை மண்டலம் தற்போது அமெரிக்காவிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, மில்வாக்கீ , சிகாகோ மற்றும் டிட்டோரைட் போன்ற நகரங்களில் புகை மண்டலம் சூழ்ந்துள்ளமையால் அப்பகுதிகளில் வசித்து வரும் மக்களை பாதுகாப்பாக இருக்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.







# கனடாவிலிருந்து கடத்தப்பட்ட மகனை தேடிச்சென்று இந்தியாவில் மீட்ட தாய்

கடத்தப்பட்ட தனது மகனைத் தேடி கனடாவிலிருந்து இந்தியா சென்ற பெண்ணொருவர், வெற்றிகரமாக மகனுடன் கனடாவுக்கு திரும்பியுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

கனடாவின் ரொரன்றோவைச் சேர்ந்த கமீலா விலாஸ் போவாஸுக்கும் (வயது 31), இந்தியரான கபில் சுனக்குக்கும் பிறந்த மகன் வாலன்டினோ (வயது 4).

தம்பதியர் பிரிந்த நிலையில், 2024 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 18 ஆம் திகதி, நீதிமன்றத்தின் அனுமதியுடன் தனது மகனை அழைத்துக்கொண்டு இந்தியா சென்றுள்ளார் கபில்.

அவர்கள் இருவரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி கனடா திரும்ப வேண்டிய நிலையில், கபில் தன் மகனுடன் இந்தியாவிலேயே தங்கிவிட்டார்.

அதைத் தொடர்ந்து, ரொரன்றோ பொலிஸார் கபில் மீது கைது ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

நாள்கள் கடந்து செல்ல, மகனை இனி பார்க்கவே முடியாமல் போய் விடுமோ என அஞ்சிய கமீலா, சமூக ஊடகங்கள் மற்றும் பலருடைய உதவியுடன், தனது மகன் வாலன்டினோவைத் தீவிரமாக தேடிவந்த நிலையில், அவர் வட இந்தியாவில் சண்டிகர் என்னும் நகரில் இருப்பது தெரியவந்துள்ளது.

அதைத் தொடர்ந்து, கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதி, தனது சட்டத்தரணிகளுடன் இந்தியா புறப்பட்டுவிட்டார்.

கமீலா நீதிமன்றத்தை அணுக, பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி, மகனுடன் நீதிமன்றம் வந்துள்ளார் கபில்.

ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி, மகனை கமீலாவிடம் ஒப்படைக்க நீதிமன்றம் கபிலுக்கு உத்தரவிட்டுள்ளது.

ஆனால், கபில் மீண்டும் தங்கள் மகனைத் தூக்கிச் செல்ல, பொலிசார் அவரைத் தீவிரமாகத் தேட, கபில் சரணடைய, கபில் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய, கமீலாவால் கனடா திரும்பமுடியாமல் போயுள்ளது.

இந்நிலையில், கடந்த 22 ஆம் திகதி, இந்திய உச்சநீதிமன்றம் கபிலின் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து, கமீலா தனது மகனுடன் கனடா செல்ல அனுமதி வழங்கியுள்ளது.

அதைத் தொடர்ந்து மகனுடன் கமீலா கனடா வந்தடைந்துள்ளார்.







# யாழில் ஆரம்பமானது கனடா கல்விக் கண்காட்சி





இலங்கை - கனடா வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மிகப்பிரமாண்டமான முறையில் கனடா கல்விக் கண்காட்சி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் ஆரம்பமானது.

கனடா - இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் குலா. செல்லத்துரை, சம்மேளனத்தின் இலங்கைக்கான தலைவர் பியந்த சந்திரசேகர மற்றும் பலதரப்பட்ட துறைசார் அதிகாரிகள் பங்கேற்கபுடன் இந்த கண்காட்சியானது சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கனடா கல்விக் கண்காட்சி மற்றும் யாழ்ப்பாணம் முதலீட்டு வர்த்தக



மன்றம் 2025 என்ற குறித்த கண்காட்சி வடக்கு கிழக்கின் இளைஞர்களை மேம்படுத்தல் - எதிர்காலத்தை கட்டியெழுப்பல் என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படுகின்றது.

வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை இடம்பெறும் இந்த கண்காட்சியானது இலங்கை வர்த்தக சபை, இலங்கை கனடா வணிக மன்றம், கனடா உயர் ஸ்தானிகராலயம், கனடா இலங்கை வணிக மன்றம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்நேரம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு மற்றுமொரு தனியார் விருந்தினர் விடுதியில் முதலீடு மற்றும் வர்த்தக கண்கட்சி ஆரம்பமாகவுள்ளதுடன், இதில் வடக்கின் ஆளுநர் உள்ளிட்ட பலர் அதிதிகளாகவும் கலந்து பங்கேற்று சிறப்பிக்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## மாண்ட்ரியாலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

132 ஆம் இலக்க வீதியின் மேற்கு வழியில் ஒருவரை வாகனம் மோதிய சம்பவம் தொடர்பாக அவசர உதவித் துறைகள் அழைக்கப்பட்டன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் யதும், அடையாளமும் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை.

மேற்படி நபரை வேகமாக வந்த வாகனம் மோதியதாகவும், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வாகனத்தை ஓட்டியவர் 20 வயது மதிக்கத்தக்க ஆண் எனவும் அவர் அதிர்ச்சிகாரணமாகமருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தின் காரணங்கள் மற்றும் சூழ்நிலைகளைத் தெளிவுபடுத்த மாகாண பொலிஸின் விபத்து ஆய்வாளர் குழு தீவிரமாக விசாரணை நடத்தி வருகிறது.



# கனடாவின் எல்லையில் இந்தியக் குடும்பம் உயிரிழந்த வழக்கில் குற்றவாளிகளுக்கு சிறை

கனடா அமெரிக்க எல்லையில் இந்தியக் குடும்பம் ஒன்று பனியில் உறைந்து பலியான வழக்கில் குற்றவாளிகளுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி, குஜராத்திலுள்ள Dingucha என்ற கிராமத்தைச் சேர்ந்த, ஜகதீஷ் பட்டேல் (வயது 39), அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் அமெரிக்காவுக்குள் நுழையும் முயற்சியின்போது, கனடா அமெரிக்க எல்லையில் பனியில் உறைந்து பரிதாபமாக உயிரிழந்தனர்.

அந்த வழக்கு தொடர்பாக ப்ளோரிடாவைச் சேர்ந்த ஸ்டீவ் ஷாண்ட் மற்றும் ப்ளோரிடாவில் வாழும் இந்தியரான ஹர்ஷ்குமார் ரமன்லால் பட்டேல் ஆகிய இருவர் மீதும் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

அந்நியர்களை அமெரிக்காவுக்குள் கடத்தும் முயற்சியில் அவர்களுக்கு காயம் ஏற்படுத்தியது, உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தியது, தனிப்பட்ட முறையிலான பண மற்றும் பிற ஆதாயங்களுக்காக அவர்களைக் கடத்த உதவியது முதலான குற்றச்சாட்டுகள் அவர்கள் மீது பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், தற்போது இந்த வழக்கில் தீர்ப்பு விவரம் வெளியாகியுள்ளது. ஹர்ஷ்குமாருக்கு 10 ஆண்டுகள் ஒரு மாதம் சிறைத்தண்டனையும், ஸ்டீவுக்கு ஆறரை ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட் டுள்ளது.

மேலும், ஹர்ஷ்குமாரின் தண்டனைக்காலம் முடிவடைந்ததும், அவர் இந்தியாவுக்கு நாடுகடத்தப்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது.







